[1994 மார்ச் 31

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற முழு விவகாரத்திற்கும் காரணமே தங்களிடத்தில் அனுமதி கேட்காமல் நடந்து கொண்டதால்தான். அந்தச் சூழ்நிலை இன்றும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு தங்களைச் சார்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. திரு. ஜி. பழனிசாமி, உங்களுடைய கவன ஈர்ப்பைப் பற்றிக் கேட்கிறீர்களா, இல்லையா ? (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். இது முறையில்லை. நீங்கள் முறையில்லாமல் நடந்து கொள்கிறீர்கள். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, நீங்கள் தயவு செய்து உட்கார வேண்டும்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் என்னிடம் அனுமதி பெறாமல் பேசியதைத் தொடர்ந்துதான் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி, உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி, உங்கள் பிரச்சினையை எழுப்பலாம். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசலாம். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே,**

2. கவன ஈர்ப்பு

(அ) நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 மார்ச் 31]

*திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ்-ன் 363 தொழிலாளர்களுக்கு நான்கு மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் மற்றும் ஒயர் பிளான்ட் என்பது சென்னை, இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் நாகப்பட்டினத்தில் இயங்கும் ஆலையாகும். இங்கு எஃகு உருக்குதல் மற்றும் இரும்புக் கம்பி தயாரித்தல் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இதில் ஒரு ஒயர் பிளான்ட்டும் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் மொத்தம் 363 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த ஆலையில் கீழ்க்கண்ட மூன்று தொழிற் சங்கங்கள் செயல்படுகின்றன.

1. நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், நாகப்பட்டினம் (எல்.பி.எஃப்).

2. நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ.).

3. நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தேசிய தொழிலாளர் சங்கம் (ஐ.என்.டி.யூ.சி.).

நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் கடந்த 11-8-1993 நாளிட்ட கடிதம் மூலம் பொதுக் கோரிக்கைகளை முன் வைத்து ஒரு தாவா எழுப்பியது. இதில் தொழிலாளர் தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டார். இதற்கிடையில் நிர்வாகம் 15-9-1993 நாளிட்ட கடிதத்தில், சென்ற நிதியாண்டிலும், இந்த நிதியாண்டிலும் நான்கு கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், தற்போது மார்க்கெட் உள்ள நிலையில் 15-9-1993 முதல் ரோலிங் மில்லையும், ஓயர்பிளான்ட் இயங்குதலையும் நிறுத்தி வைத்ததாக

தெரிவிப்பதுடன் தொழிற்சாலையை மூடுவதற்கு அரசிற்கு விண்ணப்பித்துள்ளதாகவும், தொழிலாளர்களுக்கு சட்டப்படி அளிக்கப்பட வேண்டிய தொகைகளை அளிக்க மூடுதலுக்குரிய அனுமதி கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

இதற்காக நிர்வாகம் தனது 30-9-1993 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 எப்.எப்.ஏ. இன் கீழ் நிறுவனத்தை மூடுவதாக அறிவிப்பு செய்தது. மேலும் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25-0ன் கீழ் 1-1-1994 முதல் நிறுவனத்தை மூடுதலுக்கு அனுமதி அளிக்கக் கோரி தொழிலாளர் ஆணையர் முன்பு 1-10-1993 அன்று மனு செய்தது இந்த மனு மீது விசாரணை, தொழிலாளர் ஆணையரால் மேற்கொள்ளப்பட்டு. இருதரப்பினராலும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலும் இரு தரப்பினரும் விசாரணையில் முன் வைத்தகருத்துக்கள் அடிப்படையிலும், நிர்வாகம் ஆலையை மூடுவதற்குத் தெரிவித்த காரணங்கள் போதுமானதாக இல்லை என்பதாலும், தொழிலாளர்களின் வேலை வாய்ப்பினைப் பாதுகாக்கும் மற்றும் தொடர்பான காரணங்களைக் கருத்தில் கொண்டும், நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் மற்றும் ஒயர் பிளான்ட் (நாகப்பட்டினம்) நிறுவனங்கள் மூடுவதற்கு அனுமதி மறுத்து 18-11-1993 அன்று தொழிலாளர் ஆணையரால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் கோரிக்கைகள் தொடர்பாகவும், பிரிவு 25 எஃப். எப். ஏ., இன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பு தொடர்பாகவும், தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையில், தொழிற் சங்கங்கள் இரண்டு மாத சம்பளம் மற்றும் போனஸ் தொகையினை நிர்வாகம் வழங்க வேண்டும் என்றும், அதை வழங்கினால் மீதி உள்ள பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்தனர். நிர்வாகத் தரப்பில், ஊதியம், போனஸ் வழங்கப் பொருளாதார வசதி இல்லை என்றும், தொழிற் சங்கங்கள் தொழிற், சாலையில் உள்ள பொருட்களை எடுக்க அனுமதி வழங்கினால் அதை விற்று பணம் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தனர் தொழிற் சங்கம், நிர்வாகம் 25-12-1993 வரை மூலப் பொருட்களை எடுக்க அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, தொழிலாளர் தனித் துணை ஆணையர் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அக்டோபர் 1993 மற்றும் நவம்பர் 1993 மாதச் சம்பளத்தை வழங்கி விட்டதாகத் தெரிவித்தது. இதனையடுத்து டிசம்பர் 1993 மற்றும் ஜனவரி 1994 மாத சம்பளம் நிர்வாகம் வழங்காததற்கு, தொழிலாளர்களுக்கு, தொழிற் தகராறு சட்டப்பிரிவு 33சி (2)-ன் கீழ் தொழிலாளர் நீதிமன்றத்தில் மனு செய்யுமாறு, தொழிலாளர் தனித் துணை ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும்,

1994 மார்ச் 31] [திரு. ஏ. எம். பரமசிவன்]

தொழிற்சாலை தலைமை ஆய்வாளருக்கு இது குறித்து விவரம் தெரிவிக்கப்பட்டு உரிய தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளரை இது தொடர்பாக சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் இறுதியாக 21-3-1994 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில், நிர்வாகத் தரப்பில், எல்லாத் தொழிலாளர்களுக்கும் இறுதியாகக்கணக்கினை முடித்து தொகையை வழங்க ஏற்பாடு செய்ய முடியும் எனவும், ஆலையை நடத்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. நிர்வாகம் தெரிவித்த நிலையை தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், இருப்பினும் இது குறித்து பொதுக் குழு கூட்டம் கூட்டி பேசி முடிவெடுத்து தங்களது நிலையை தெரிவிப்பதாகவும் தெரிவித்தனர். இப்பிரச்சினை குறித்து தொழிலாளர் தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடத்தி வருகிறார். அடுத்த பேச்சு வார்த்தை 4-4-1994 அன்று நடைபெற உள்ளது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் 60 ஆண்டுகளுக்கு முன்பாக முதன் முதலிலே ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டமாக இருந்தபோது, இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் துவங்கப்பட்டது. பல்வேறு தகடுகள் மூலமாகத் தொழில்களைத் துவங்கி, 1,500 தொழிலாளர்கள் அதிலே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த நிர்வாகம் தொடர்ந்து பணியாளர்களைப் படிப்படியாக குறைத்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு 363 தொழிலாளர்கள் மட்டுமே இருந்து கொண்டு இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும், தங்களுக்கு உபகரணங்களை வழங்கவில்லை என்ற காரணம் காட்டி இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு, அந்தத் தொழிற்சாலையை மூடுகின்ற அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் மற்றும் ஒயர் பிளான்ட் இயங்கி வருகின்றன. அங்கே செயல்படும் இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் 11—8—1993 அன்று பொதுக் கோரிக்கைகளை வைத்து ஒரு தாவா எழுப்பியது. நிர்வாகம், நட்டத்தில் இயங்குவதாகவும், மார்க்கெட் நிலவரம் சரியில்லை என்றும் காரணம் காட்டி, ஆலையை மூட முடிவு செய்து, தொழிலாளர் ஆணையரிடம் அனுமதி கோரியது. ஆணையர் அனுமதி அளிக்க மறுத்,

உத்தரவிட்டுள்ளார். தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் நடந்தன. தொழிற் சங்கத்தின் அனுமதியோடு நிர்வாகம் 25—12—1993 வரை மூலப் பொருள் களை விற்று, தொழிலாளர்களுக்கு அக்டோபர், மற்றும் நவம்பர் 1993 ஆகிய இரு மாதங்களுக்குச் சம்பளம் வழங்கியது. அதனை அடுத்து, டிசம்பர் 1993 முதல் நிர்வாகம் சம்பளம் வழங்க வில்லை. தொழிலாளர் தகராறுகள் சட்டப் பிரிவு 33 (சி) (2)-ன் கீழ் தொழிலாளர் நீதிமன்றத்தில் மனுச் செய்து நிவாரணம் காணுமாறு தொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள் ளார்கள். தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளரை இது தொடர்பாக, சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் நட வடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. நிர்வாகம் தெரி வித்த நிலையை தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. தொழிற் சங்கங்கள் பொதுக் குழுவில் இது குறித்து பேசி தங்கள் முடிவை தெரிவிப்பதாகத் தெரிவித்தனர். 4—4—1994 அன்று மீண்டும் பேச்சு வார்த்தையை தொழிலாளர் தனித் துணை ஆணையர் நடத்த இருக்கிறார்.

முற்பகல் 10-10

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டது போன்று நான்கு மாத காலமாக அந்த நிறுவனத்திலே அதிகாரிகள் பேசிய போது, சம்பளத்தை அந்த நிர்வாகம் வழங்க மறுத்துக் கொண்டு வருகிறது. அதே நேரத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து ஆலை மூடப்படுகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இப்பிரச்சினையில் இவ்வரசு தலை யிட்டு தொழிலாளர்களுக்கு அக்டோபர் 1993 மற்றும் நவம்பர் 1994-க்குச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1993 முதல் வழங்கப்படாத சம்பளத்திற்கு தொழிலாளர் நேரிடை யாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 33-சி (2)-ன்கீழ் தொழி லாளர் நீதிமன்றத்தில் கேட்பு மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நிரு வாகத்தை மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் தொழிற் தகராறு சட்டத்தின்படி நிர்வாகம் அனைத்துத் தொழி லாளர்களுக்கும் வேலையில்லாத நிலைமையிலும் முழுமையாக சம்பளம் வழங்க வேண்டும். ஆகவே, தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாது. வருகின்ற 4—4—1994 அன்று தொழி லாளர் தனித் துணை ஆணையர் முன்பு மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. ஆகவே, நம்முடைய இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், பொற்கால ஆட்சியில் நிறுவனம் மூடப்படாது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.